# விண்ணேற்பியல் பயிற்சி முகாம்



முகாமில் பேசுகிறார் பேராசிரியர் சேகர் பகாரே. உடன், விஞ்ஞானி சுந்தரராமன்.

கொடைக்கானல், மே 19: கொடைக் கானலில் உள்ள இந்திய வானி யல் ஆராய்ச்சி நிலையத்தில், விண் ணேற்பியல் மற்றும் இயற்பியல் தொடர்பான கோடைக்கால பயிற்சி முகாம் தொடங்கியது.

மும்பை, தில்லி, லக்னௌ உள்பட தேசிய அளவில் பி.இ, பி.டெக், எம்.எஸ்.சி இயற்பியல் படித்து வரும் 30 மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்திய விண் வெளி ஆராய்ச்சி மையத்தின் விஞ் ஞானி சுந்தரராமன், பேராசிரியர் சேகர் பகாரே உள்பட 14 விஞ்ஞா னிகள் கலந்து கொண்டு பயிற்சி அளித்து வருகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை டாக்டர் ஸ்டான்லி செய்துள்ளார்.

இந்தப் பயிற்சி முகாம் மூலம் திறமைமிக்க மாணவர்களை இத்து றையில் ஈர்ப்பதற்காக இதிலுள்ள வேலைவாய்ப்பு சம்பந்தமாக இம் முகாம் நடத்தப்படுகிறது.

இம் முகாமிலிருந்து தேர்வு செய் யப்பட்ட மாணவர்கள் 3 மாதம் தங்கி ஆய்வு நடத்த வேண்டும் எனக் கூறினார் விஞ்ஞானி சுந்தர ராமன்.

Dinamani, Wednesday, May 19, 2010, pp. 3